உ

ஸ்ரீராமஜெயம்.

விநோத

# ஜாலக்கண்ணாடி

ஐந்தாம்பாகம்.

இவை- சிறுமணவூர்
முனிசாமி முதலியாராலியற்றப்பட்டு,



நுங்கம்பாக்கம்
அருணகிரிமுதலியார்
அவர்களது,
அம்பாளச்செந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1896.

உ

கடவுள் துணை.

# விநோதஜாலக்கண்ணாடி

காப்பு- விருத்தம்.

முந்தியேபராபரியே சத்தியாகி
மூவர்களையுண்டுபண்ணி முதன்மையாளுய்
பிந்தியேபெருமாளின் தங்கையாளுய்
பெருமையுடன் சிவனுடையதேவியாளுய்
சிந்தைமகிழ்முக்கோடி மும்மூர்த்தியோடே
செய்துவைத்தாய் சித்தர்பதினெண்பேர்தன்னை
உந்தருனளால்வதித்த கணபதியைவேண்டி
ஓதினேன் ஐந்தாம்பாகம் வுலகமீது,

சகலவிஷமும் நீக்க உபயோகவித்தை

உண்டானவித்தையடா உண்மைகேளு
ஒருவருக்கும் ஆகாத யெட்டிதன்னை
கண்டவுடன் துளைசெய்து விளாங்காய்போலே
கண்மணியேபழம்புளியை உள்ளேவைத்து
மண்டலந்தான்சென்றெடுத்து எட்டியென்ற
மரத்தாலேசிமிள்செய்து வைத்துக்கொள்ளு
சண்டாளவிஷங்களப்பா யெதுவானாலும்
சாற்றிவிடுவெற்றிலையில் மிளகுபோலே,
மிளகுபோல்வெத்திலையில் மடித்துக்கொண்டு
மூன்றுநாள்கொடுத்துவிடு ஆறுவேளை
அளவிதற்குபச்சரிசி கஞ்சியாகும்
அப்பனேமுருங்கயிலை போட்டுக்காச்சு
உளவறிந்தஉப்புதனை சேர்க்கவேண்டாம்
உத்தமனேபத்தியத்தை பயமாய்க்காரு
களவானவிடதுபோல் விஷங்களெல்லாம்
கண்மறையப்போகுமடா உண்மைதானே.

வ-ம், எட்டிமரத்தில்விளாங்காய் பூரும்படியான துவாரம்செய்து அவ்வளவுபழம்புளியை கொட்டைமுதலான்தும்போக்கி மைனம்

போல் உள்ளேவைத்து அந்த எட்டிமரத்தினாலே ஆப்படித்து நாற்பதுநாள் சென்று எடுத்து எட்டி மரத்தினால் சிமிள்செய்து அதில் போட்டுவைத்துக்கொள்ளவும் தேள் - நண்டுநெருக்காய் நாய் பூனை எலி பெருச்சாளி வண்டு ஓணான் பச்சோந்தி முதலான யின்னமெதுவானாலும் (சாறை சற்பம்) தவிரமற்றதுகளெல்லாம் மிளகுப்பிரமாணம் எடுத்து வெத்திலையில் மடித்து சொல்லாமல் கொடுக்கவும் பத்தியம் பச்சரிசியும் பிடிமுருங்கயிலையும் போட்டுகஞ்சி காச்சிகொடுக்கவும் உப்பு ஆகாது கடும்பத்தியம் மூன்றுநாளைக்கு காலை மாலை இரண்டு வேளையும்.

அளந்த அரிசி உபிரியாகுஞ்சாலம்

ஓரளவாய்கிண்ணமது யிரண்டுசெய்து
உள்ளவேலொன்றுக்கே கனமாய்செய்து
தாராளமாய்சபையில் வந்துநின்று
திகைக்காதே அரிசிதனைகையால்வாங்கி
ஓரளவாய்கிண்ணமதில் அளந்துகொண்டு
உள்ளளவுகுறைந்த கிண்ணம்மேலேமூடி
பாருங்கள் சபையோரே யென்று தூக்கி
பக்குவமாய் கீழ்மேலாய் கவிழ்த்துவையே,

வ-ம், கால்படி அரிசிபிடிக்கும்படியான கிண்ணம் ஒன்றுசெய்து அதுபோலவே இன்னம் ஒன்றுசெய்யவேணும் - உ - வது, கிண்ணத்தில் உள்ளே ஆழம்வைக்காமல் ரெண்டுபிடி அரிசி மீதியாகும்படியாய் மரம் கனமாகவைத்து செய்துக்கொண்டு அந்த இரண்டுக்கும் வர்னம் ஒரேமாதிரியாய் பூசியிருக்கவேணும் அரிசியைக்கொண்டுவரச்சொல்லி ஆழமான கிண்ணத்தில் தலைவழிக்க அளந்துக் கொண்டு மற்றகிண்ணத்தை மேலேமூடி சபையில்காட்டிக் கொண்டே தந்திரமாய் கீழ்மேலாய் கவிழ்த்து வைத்துவிட்டுமெதுவாய் மேலிருக்கும் கிண்ணத்தையெடுத்தால் அரிசி குபுகுபுவென்று பொங்கிவந்துவிடும் இது ஆச்சரியமாயிருக்கும் இதுபோலவே உளுந்து பயறு கடலை பட்டாணி நெல்லுமுதலானதும் அளந்து அதிகமாய்க்காட்டாலாம்.

தண்ணீர் பொங்கும் ஜாலம்,

பாரப்பா குசவனிடம் உளவுகாட்டி
பக்குவமாய் குடுவையொன்று செய்யச்சொல்லு
தூரப்பா கழுத்தடியில் புனலைப்போல
சொந்தமாய் பதியவைத்து செய்துசுட்டு

நீரப்பாநிறையவிட்டு கையிலேந்தி
நெடுஞ்சபையில் காட்டியதை கவிழ்த்துப்போடு
வீரப்பா தண்ணியெல்லாம் ஊத்தினாற்போல்
விளங்குமடா பாதிசெலம் உள்ளேநிற்கும்
காரப்பா கண்மேலே விரலைவைத்து
கக்காமல் தூக்கியதில் வாயைவைத்து
கூரப்பாமூச்சிகொண்டு ஊதினக்கால்
குபுகுபென்று பொங்குமது குலுங்குவாரே.

வ-ம், குசனிடம் குடுவையொன்று செய்து அந்த கழுத்தடியில் பொருந்தினாற்போல் புனல்மாதிரியாய் உள்ளுக்கு பொருந்தவைத்து அந்தபுனல் அடியில் ஒருதுவாரமும் குடுவை தொப்பை மையத்தில் ஒரு துவாரமும்வைத்து செய்துக்கொண்டு மேல்புரம் செகப்புவர்னம்பூசி கண்ணைப்போல துவாரஞ்செய்திருக்கிறே மாகையால் உடம்பெல்லாம் கண்கணைப்போல் கருப்புவர்னத்தில் எழுதி முழியும் கருப்புவர்னம் வைக்கவேணும் சபையில்வந்து துவாரத்தின்மேல் பெரியவிரலைவைத்து அழுத்தி பிடித்துக்கொண்டு சொப்பில் செலங்கொண்டுவரச் சொல்லி இந்த குடுவையில் வார்த்து (சல்) மலையாளபகவதி யென்று மேலேவைத்து இதோ குடுவையை கவிழ்த்துவைக்குறேன் தண்ணியிருக்குமா போகுமாவென்று சொல்லி கவிழ்த்துவைக்கவும் வைத்தால் பாதிசெலம் கிழேபோய்விடும் துவாரம் மையமாகைல் பாதிசெலம் யிருக்கும் மறுபடியும் துவாரத்துமேல் விரலைவைத்து மூடியெடுத்து அந்ததுவாரத்தில் வாயைவைத்து மூச்சுப்பிடித்து ஊதினல் புனலிலிருக்கும் தொண்டிவழியாய் தண்ணிமேலுக்கு பொங்கும் மறுபடியும் தொண்டியைபிடித்துக்கொண்டே கவிழ்த்தால் சலமிருக்காது அப்படியே தூக்கியூதினல் பொங்கிவழியும் இதுபோல செலமிருக்கிறவரையில் செய்யலாம் சந்தோஷப்படுவார்கள், சூ௩

## பாம்புகடித்தபேர்க்கு விஷமிறக்குஞ்ஜாலம்

பாம்பென்றால்படைநடுங்கு மென்றேசொல்வார்
பழியிருந்துகடித்துவிட்டால் உயிர்க்குச்சேதம்
தேம்புவார் திகைத்திடுவார் சோர்ந்துபோவார்
தரைதனிலேவிழ்ந்துபல்லுங் கிட்டிக்கொள்வார்
சாம்பசிவ மென்றுஉன்னைப் பணிவாரப்பா
சத்தியமாய் கைமுறையை கேளுகேளு
தாம்பரத்தால் உச்சியிலே மூன்றுகீரல்
தக்காளிச் சார்பிழிந்து தேய்த்தாயானல்

வேம்பகன்று மீளுவார் தீராவிட்டால்
வாசகத்தால் சொல்லுகிறேன் வாங்கிக்கொள்ளே.

வ-ம், பாம்புகடித்தவர்க்கு உடனே சன்னமாகிய பானை ஓட்டால் அவாள் உச்சியில் மூன்றுகீரல்கீறி அதிலே தக்காளிச்சாறுபிழிந்து உள்ளங்கையினுல் அறைககி தேய்க்கத்தேய்க்கவிஷங்கக்கி எழுந்திருப்பார்கள் ஜாகைகாச்சிக்கொடுக்கவும் இந்தமூலிகை இருளருக்கும் ஜோனகருக்கும் உயிருககு உயிருனமூலிகை யின்னம் கீழாநெல்லி குப்பைமேனியிலும் விஷம்நீங்கும் அவசியமாய் சிறியா நங்கை செடிசமூலம் உலர்த்தி பொடிப்பண்ணி வைத்துக்கொண்டால் மூணு விரற்கடைபிரமாணம் எடுத்து ஒரு வெத்திலையில் வைத்து கொடுத்தாலும் தண்ணியில் கலக்கி உள்ளுக்குவிடுத்தாலும் சிக்கிரம் விஷமிறங்கும் இதுவும் கைமுறைதான் சூஉ

புட்டியில் மாம்பழங்காட்டுஞ்ஜாலம்

வாங்குவாய் கருப்புநிற புட்டியொன்று
வளமாக அடிப்புனலை அறுத்தெடுத்து
சிங்காரமாம்பழங்கள் உள்ளேவிட்டு
சீராக தகரபுனல்செய்துமூடி
மங்காத தாரதற்கு காச்சிப்பூசி
மாசபைக்கு பழம்வேரோ அருத்துயீந்து
இங்கிவர்கள் தின்றபழம் வருவிப்பேன்பார்
யென்றந்த புட்டிகளை உடைத்துவாங்கே,

வ-ம், ஒருகருப்புபுட்டியை அடியில் புனல்போ லிருப்பதை தக்கினகருவியால் அருத்தெடுத்துவிட்டு நல்லயினிப் பாகிய மாம்பழங்களைஉள்ளே போட்டு தகரத்தினுல் புனலைப்போல் செய்து பிகுவாகச்சொருகி வொட்டுத்தெரியாமல் தாரைக்காச்சி பூசிவைத்துக் கொள்ளவும் புட்டியில்போட்டபழம் எத்தனை எவ்வளவுபெரிசோ எந்நிரமோ அதுபோல கையில் எடுத்துக்கொண்டு சபையில்வந்து இதுபஞ்சாப்தேசத்திலிருந்து குட்டிச்சாத்தான்கொண்டுவந்த மாம்பழம் பாருங்கள்ளென்று பில்லை பில்லையா யறுத்து அனைவருக்கும் கொடுக்கவும் முன்பழமிருக்கும் புட்டியில் பிடித்தவரையில்நல்லஜெலம்விட்டு யிருக்கவேணும் அப்பா பரமாநந்தசிஷ்யா தாகமெடுக்கிறது தண்ணிகொண்டு வாவென்று கேட்டு அந்த புட்டினயவாங்கி சாப்பிடுவதுபோல உதட்டில்வைத்து தண்ணிகீழ்மேலும் சிந்தும்படி பாய்செய்து மேசைமேல்வைத்து (சல்) குட்டிச்சாத்தான் முன்னே அறுத்துக்கொடுத்த மாம்பழத்தை யிந்தபுட்டியில் வரச்செய்வாயா

ஏதோ உன் சாமர்த்தியங் காட்டு என்று சொல்லி மாத்திரைக்கோல் எடுத்து ஒன்டு- திரி, ஏக்- தோ தீன்- ஒகடி- ரெண்டு- மூடு- ஒண்ணு- ரெண்று- மூணு, என்றுபுட்டியைசுத்தி எண்ணிஒரு நூல்கட்டையெடுத்து புட்டியை பிடித்துக்கொண்டு நோக்கிஅடித்து விட்டால் பழங்கள்குபீலென்று வெளியில்விழும் மகாஅதிசயமாயிருக்கும் ௬௩

ஆகாயத்தில்விட்டபுறா புட்டியில்காட்டுஞ்ஜாலம்,

முன்போலேபுட்டிதனை பதப்படுத்தி
முசியாமல்வெள்ளைபுறா உள்ளேவிட்டு
பின்புரத்தைசீலைசெய்து தாருபூசி
பெருஞ்சபையில்தளியாக வந்துநின்று
அனைவர்க்குவேறுபுரா யேந்திக்காட்டி
ஆகாயமார்க்கமதில் விட்டுப்போடு
யென்னமோமந்திரங்கள் செய்தாற்போலே
யெட்சணியை ஓதியிதை யெடுத்துத்தாயே

(வ-ம்.) முன்போல ஒரு கருப்புபுட்டியை அடியறுத்து இரண்டு வெள்ளைப் புறா கொண்டு வந்து ஒன்றை உள்ளேவிட்டு தகர தட்டினால் புனல்போல் செய்து அடியில் சொருகி தாருபூசி யிருக்கவும் சபையில்வந்து மற்ற ஒரு வெள்ளைப்புறாவை சபையில்காட்டி வாசலில்வந்து ஆகாயத்தில் விட்டுவிடவும் பின்பு இந்தபுட்டியை மேஜைமேல்வைத்து குட்டிச்சாத்தானாகிய பொம்மையை அருகில்வைத்து மாத்திரக்கோலைகையில் பிடித்து பொம்மையைப் பார்த்து ஓகுட்டிச்சாத்தான் யிப்போது நான்விட்டபுறா இந்தபுட்டியில்வருமா வராதல்லவா (சல்)நீ எனக்கு அடிமையா யிருப்பது நிஜமானால் வரும்படியாய்ச் செய்பார்ப்போம் என்றுமுன்சொல்லிய கணக்குகளை யெல்லாம் சொல்லிஇந்த புட்டியையெடுத்து கீழேபளீலென்று தட்டினால் பறந்துபோகும் இதுஜெகஜ்ஜால மாயிருக்கும் ௬௪

திருட்டுபிடிக்குஞ் ஜாலம்,

கேளடாமனையிடத்தில் களவுபோனால்
கெடுதொழிலைச்செய்தவரை பிடிப்பதற்கு
ஆளடாஒவ்வொருவன் பேரும்வேறே
அப்பனேதனித்தனியா சீட்டில்நாட்டி
சூளடாவாசலிலே மண்பரப்பி
சந்தேகமுள்ளவன்பேர் கீழேவைத்து
வேளடாஅககினியை மேலேமூட்டி
மத்தியிலேஈறுக்கையெல்லாம் வேகப்பாறே

கேளடா அடியோடே வாரிக்கொண்டு
குடத்திலேகரைத்துவிட மிதந்துபோமே,

(வ-ம்) ஒருவீட்டில் களவுபோகுமாகில் வாசலில் மெழுகி கோலம் போட்டு பிள்ளையார் வைத்து அந்தவீட்டி லிருப்பவர் பேரையெல் [illegible]வோலை குருத்துகளில் வெவ்வேறு எழுதிக்கொண்டு வெறும் சீட்டு ஒன்று கூடவைத்துக்கொண்டு இரகசியமாய் சந்தேக மிருக்கும் ஆளை திரவிசாரித்து ஒருசட்டியில் சாம்பலைவாரி வாசலில் வைத்து சந்தேகபேர்வழி சீட்டைதந்திரமாய் சாம்பலில்சொரிகி பின்நெருப்பைவாரி சட்டியில் யிருந்ததொகைபோல் சீட்டுகளை யெண்ணி அக்கினியில் போட்டுவிட்டு மந்திரம் செய்வதுபோல் விபூதிஎடுத்து ஒருநாழி வரையில்ஓதி அக்கினியில் கொஞ்சம் போட்டு அனைவருக்குங் கொடுத்துவந்து பின்பு ஒருகுடத்தில் தண்ணிகொண்டு வரச்சொல்லி சாம்பலுடன்போட்டுகரைத்தால் அந்தசீட்டுமிதந்துவிடும்

## உலர்ந்துபோனயிறுவைஓடவிடும்ஜாலம்,

உலர்ந்ததொருயிறாக்களிலே சிலதுவாரி
உத்தமனே கிளுவையிலை சார்பிழிந்து
கலந்திடுவாய்யிறுவில்விட்டு பிசைந்துக்கொண்டு
கணாலதுதுரவுகளில் விட்டாயானால்
கலகமதுயென்சொலவேன் யிறுக்களெல்லாம்
கடிப்பதுபோல்நடப்பதுபோல் ஓடுதல்போல்
விலகாதுஒருசாமம் வேடிக்கைத்தான்
விளையாடுப்பிள்ளைகள்போல் ஆடுந்தானே,

(வ-ம்) உலர்ந்துபோன யிறுவைகொஞ்சம் அள்ளிவந்து கிளுவையிலையை பரித்துவந்து உரலில்போட்டு யிடித்துசார் பிழிந்து இறாவில்விட்டு பிசைந்துகிணறு அல்லது துரவுயிதுகளில் தூவிவிட்டுநின்றுபார்த்தால் உயிரோடிருக்கும்போது எப்படிஓடுமோ அதுபோல்குருக்கு நெடுக்குமாயோடும் சிலதுகிருகிருவென்று சுழலும்பார்த்தவர் பிரமிப்பார் ௬௬

## வலையில்மீண்டாதஜாலம்

செம்படவர்பிழைப்புதனை கெடுக்குஞ்ஜாலம்
சொல்லுகிறேன்சூக்ஷமடா செய்தால்தோஷம்
அம்புவியில்மெத்தவுண்டு செருப்படைதான்
அதனுடையசார்பிழிந்து வைத்துக்கொண்டு

சம்பரமுடன்பெருங்காயம் கரைத்துத்தாக்கி
செம்படவர்வலைகளிலே வீசிப்போடு
வெம்பியவராழுதாலும் மீன்படாது
விட்டிடுவார்வேறுதொழில் பார்ப்போமென்பார்

(வ-ம்,)செறுப்படைச்சாறு அதோடுகூடபெருங்காயமும் கரைத்துசெம்படவர் காயவைத்திருக்கும் வலைகளின்மீது விசிறிஊத்திவிட்டால் அந்தவலையில்மீன்படாது மறுபடியும் உழமண்ணுபோட்டு ஊறவைத்து வேக்காடு கொடுத்து தோய்த்து காயவைத்தால்தான் மீன்கள்படும் இந்தவேலைசெய்தால் பிழைப்புக்கு இடையூராகையால் தோஷமென்பது சுஎ

## தண்ணீரில்மிதக்குஞ் ஜாலம்

தனந்தனமாய்குவித்தாலும் இந்தவித்தை
தாரணியில்சித்தர்முதல் சொல்லமாட்டார்
கினவிலுமேபொய்யென்று நினைக்கவேண்டாம்
கிடோசரிவேர்தவளைநிணம் ரெண்டுங்கூட்டி
அனல்பறக்கமைபோலே அரைத்துக்கொண்டு
ஆள்படுக்கும்தடிக்கிலே தடவிபோட்டு
இனப்பார்க்ககுளத்திலே தடுக்கைப்போடு
யில்லாத்தைகடந்தவன்போல் யோகஞ்செய்யே

(வ-ம்.) கிடோசரியென்கிற மூலிகைவேறும் பச்சைத்தவளை நிணமும்இந்தஇரண்டும் வேணமட்டுஞ் சேர்த்து அரைத்துஒரு ஆள்படுக்கிற தடுக்கில் ஒருபுரம்தளும்பபூசிஉலர்த்திகுளத்திலேபோட்டு தான்விபூதி யுத்திராக்ஷம் முதலானதும் பலமாய்பூசி கையில் ஜெபமாலை எடுத்துக்கொண்டு மல்லாக்கப் படுத்து யீஸ்வரனைநோக்கி யோகஞ் செய்பவனைப்போல் யிருக்கவும்ஆனால் முதுகினால் நெட்டிக்கொண்டே யிருந்தால் யிக்கரையும் அக்கரையும் மிதந்துக்கொண்டேயிருக்கும் கண்டவர்பிரமிப்பார் கடவுளைப்போல் வந்தனை வழிபாடுகளும்செய்வார் இதுமைமுறை சுஅ

ஐந்தாம்பாகம் - முற்றிற்று.

---

இனி ஆறும்பாகம்.